**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 06–ஆம் நாள் சனிக்கிழமை**
**IA.5/2026 in O.S.174/2019 & IA.6/2026 in O.S.174/2019**

அப்பாப்பூர் பெரியநாயகி அம்மன் கோயில்
Rep By பூசாரி, வேலாயுதம். ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. மணிமேகலை,
2. கலைவாணி,
3. கலைமதி,
4. கலியபெருமாள்,
5. குமார்,
6. சங்கீதா,
7. அன்பழகன்,
8. கோவிந்தன். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 15.04.2026 அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பிர்களாகப்பட்டும், 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 8 ம் எதிர்மனுதாரர் Steps எடுக்காத காரணத்தினால் வழக்கில் தள்ளுபடி உத்தரவிட்டும், மனு பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**பொதுவான உத்தரவு**

1. இடைநிலை மனுக்கள் : 05/2026, 06/2026 இம்மனுக்களானது கடந்த 03.02.2026 அன்று முடிக்கப்பட்ட PW2 குறுக்கு விசாரணையினை Reopen மற்றும் Recall செய்து உத்தரவாக வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுதாரர் மனுவின் சுருக்கம் :**</u>

2. இம்மனுக்களின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்கள் பெயரில் தாவா தொடர்ந்துள்ளார் என்றும், மேற்படி தாவாவில் மனுதாரரை PW1 ஆக விசாரித்து, மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் PW2 சாட்சிக்கு முதல்நிலை விசாரணை முடிக்கப்பட்டு, PW2 குறுக்கு விசாரணைக்காக வேண்டி கடந்த 03.02.2026 அன்று வாய்தா இருந்த நிலையில், மனுதாரர் தரப்பு சாட்சிக்கு தொடர் காய்ச்சல் காரணமாக அவர் அவதிப்பட்டு வந்த காரணத்தால் PW2 குறுக்கு விசாரணைக்காக வேண்டி நீதிமன்றத்தில் ஆஜார இயலவில்லை என்றும், மேற்படி தாவாவில் கடந்த 03.02.2026 அன்று PW2 குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டுவிட்டது என்றும், இது வேண்டுமென்று ஏற்பட்ட காரணமல்ல என்றும், தாவாவில் நல்ல கட்சியுள்ளது என்றும், PW2 குறுக்கு விசாரணை செய்தால் தான் மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்க இயலும் என்றும், ஆகையால் கடந்த 03.02.2026 அன்று முடிக்கப்பட்ட PW2 குறுக்கு விசாரணையினை Reopen மற்றும் Recall செய்து உத்தரவாக வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**4ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து இதனை மற்ற 5 முதல் 7 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம் :**</u>

3. மனுதாரரின் இம்மனுக்கள் அனுமதிக்க உகந்ததல்ல என்றும், இவ்வழக்கில் மனுதாரரை PW1 ஆக விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணையும் சென்ற 22.10.2024ம் தேதியில் விசாரித்து முடிக்கப்பெற்று மனுதாரர் தரப்பில் கூடுதல் விசாரணை ஏதேனுமிருப்பின் அதற்காக உரிய வாய்ப்பு கொடுத்து 05.11.2024, 18.11.2024, 03.12.2024, 09.01.2025 தேதிகள் மாற்றப்பட்டும் கூடுதல் சாட்சி ஏதேனும் இல்லாத நிலையில் சென்ற 09.01.2025ம் தேதியில் மனுதாரர்/வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டது என்றும், அதன்பின்பு மனுதாரர் 6 மாதம் கழித்து மீண்டும் மனுதாரர் தரப்பு விசாரணையை Reopen செய்யக்கோரி மனு கொடுத்து அதுவும் IA.4/25 என்ற நெம்பரின் கீழ் சென்ற

11.11.2025 தேதியில் அனுமதியானது என்றும், அதற்கேற்ப மனுதாரர் தரப்பில் PW2 சாட்சி குறுக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாத காரணத்தால் உரிய முறையில் PW2 சாட்சியம் முடிக்கப்பட்டது என்றும், அவ்வகையில் இம்மனு மனுதாரரால் முன் மனு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது மனுவாகும் என்றும், மனுதாரர் தரப்பு சாட்சி PW2 சுந்தரம் என்பவர் குறுக்கு விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்ததற்கான காரணம் ஏதும் இம்மனு அபிடவிட்டில் கூறப்படவில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்த முன் மனு அபிடவிட் IA.4/25 மனு அபிடவிட்டிலும் தொடர்காய்ச்சல் காரணமாக ஆஜராகவில்லை எனவும், இம்மனு அபிடவிட்டிலும் அதே காரணம் கூறி இம்மனு தாக்கல் செய்திருப்பதையும் கருத்தில் கொள்ளும்பட்சத்தில் இம்மனு அபிடவிட்டில் கூறியுள்ள காரணம் உண்மையல்ல என்றும், ஆகையால் மனுதாரரின் மனுவை 4ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிபிட்டு மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதத்தில் வாதிட்டார்.

7. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கில் கடந்த 11.03.2024 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு மேற்படி வாய்தா விசாரணை பட்டியலுக்கு மாற்றப்பட்டு கடந்த 05.06.2024 அன்று வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக

விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரை ஆவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளது. வாதி தரப்பு குறுக்கு விசாரணை 22.10.2024 அன்று முடிக்கப்பட்டுள்ளது. பின் இதர வாதிதரப்பு சாட்சியத்திற்காக வாய்தா 05.11.2024, 03.12.2024 ஆகிய தேதிகளில் மாற்றப்பட்டு கடந்த 09.01.2025 அன்று வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. 09.01.2025 ல் முடிக்கப்பட்ட மேற்படி வாதி தரப்பு இதர சாட்சியத்தை Reopen செய்ய தாக்கல் செய்த மனு I.A.4/2025 என நம்பராகி 11.11.2025 அன்று அனுமதிக்கப்பட்டு பிறகு 27.11.2025 அன்று வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக கடந்த 10.12.2025 அன்று மாற்றப்பட்டு, வா.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக பல வாய்ப்புக்கள் வழங்கப்பட்டும், வா.சா.2 ஆஜராகாததால் கடந்த 03.02.2026 அன்று வா.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, பின்பு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா உள்ள நிலையில் தற்போது முடிக்கப்பட்ட வா.சா.2 ன் குறுக்கு விசாரணையினை Reopen மற்றும் Recall செய்ய வேண்டி வாதி இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கோரியுள்ள மனுக்கள் அனுமதிக்க உகந்ததல்ல என்றும், மனுதாரர் தாக்கல் செய்த முன் மனு அபிடவிட் IA.4/25 லும் தொடர்காய்ச்சல் காரணமாக ஆஜராகவில்லை எனவும், இம்மனு அபிடவிட்டிலும் அதே காரணம் கூறி இம்மனு தாக்கல் செய்திருப்பதையும் கருத்தில் கொள்ளும்பட்சத்தில் இம்மனு அபிடவிட்டில் கூறியுள்ள காரணம் உண்மையல்ல என்றும், மனுதாரரின் மனுக்களை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. இருப்பினும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின் உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்றும்,

மேற்படி வழக்கானது நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் மனுதாரரின் மனுக்களை அனுமதிக்கப்பட வேண்டியது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி அதன்படியே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9. மேற்படி மனுதாரரின் மனுக்களை அனுமதிப்பதால், 4ம் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுக்களை அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10. எனவே முடிவாக,** மனுதாரர் 4ம் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகை **ரூ.500/-**யை வரும் **18.06.2026**ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுக்கள் தானாக தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.**19.06.2026**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 06-ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :**

- இல்லை -

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.